மாயுரம் வேதநாயகரும் அவரின் பெண்ணிய சிந்தனைகளும்

ஆய்வாளர் பி.ஜான்சன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை, சாராள் தக்கர் கல்லூரி , திருநெல்வேலி

நெறியாளர் முனைவர்.ஜோ.ஜோசப்பின் ஜூலியட்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
நாசரேத் மர்காசூஸ் கல்லூரி, பிள்ளையன்மனை

முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களை சமூக, அரசியல் பொருளாதாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு செயல்படும் கட்டமைப்புகளில் அடிமைப்படுத்தலை எதிர்த்து குரல் கொடுக்கும் கொள்கை, கலாச்சாரம் ஊடக இயக்கமாகும். ஆண்களுக்கு நிகராகவும் சமூகத்தின் சரிபாதியாகவும் முன்னிறுத்தும் அடையாளமாகும்.

மாயுரம் வேதநாயகம் பிள்ளை (1826- 1889) பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே பெண்ணியம் மற்றும் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்த ஒரு மாபெரும் முன்னோடி ஆவார்.

மாயுரம் வேதநாயகம் பிள்ளை தனது இலக்கியப்படைப்புகள் மூலமாக நிலை நிறுத்தியதை பற்றி இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

மாயுரம் வேதநாயகம்

மாயுரம் வேதநாயகம்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1826-1889) வாழ்ந்த தமிழறிஞர் தமிழ் மொழிக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் குறிப்பாகப் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் அவர் செய்திருக்கும் தொண்டுகள் அளவிடற்கரியவை. ''சித்தாந்த சங்கிரகம்'' என்று முதல் சட்டத்துறை நூலை வெளியிட்ட பெருமை வேதநாயகரைச் சாரும் ''சர்வ சமய சமரசக் கீர்த்தனை'' பாடப்பட்டு வந்த காலத்தில் வேதநாயகர் தமிழ் மொழியில் கீர்த்தனைகள் இயற்றி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை ''சத்திய வேத கீர்த்தனை'' என்றும் நூல்களாக வெளியிட்டார். ஆங்கில மொழியல் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிகாகச் சிறுகதையும், புதினமும் தோன்றியிருப்பது போல் தமிழ் மொழியிலும் உருவாக வேண்டும் என்று விரும்பிய வேதநாயகர், பிரதாப முதலியார் சரித்திரம்சுசு என்னும் புதினத்தை வெளியிட்டுத் தமிழில் புதின இலக்கியத்திற்கு வித்திட்டார். அதனாலேயே ''தமிழ்ப் புதினத்தின் தந்தை'' என்றும் போற்றப்பட்டார்.

1869-ஆம் ஆண்டில் ''பெண்மதி மாலை'' என்னும் இசைப்பாடல் நூல் ஒன்றையும் 1870-ஆம் ஆண்டில் ''பெண் கல்வி'', ''பெண் மானம்'' ஆகிய இரு உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

வேதநாயகரின் கீர்த்தனைகள் பேசும் பெண்ணிய சிந்தனைகள்

''பெண்களுக்குக் கல்வி எதற்கு? அவர்கள் படித்து உத்தியோகம் செய்யப் போகிறார்களா என்ன?'', பெண்கள் படித்தால் கணவனுக்கு அடங்கி நடக்க மாட்டார்கள். ''வித்தியா கர்வத்தினால் கெட்டுப்போய் விடுவார்கள்'' என்று பலரும் பலவாறு பேசிக் கொண்டிருந்த காலத்தில், ''சரீரத்துக்கு ஆகாரம் எப்படியோ, அப்படியே கல்வியானது புத்திக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது என்று கருத்துரைத்தவர் வேநாயகர் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும்.

கல்வி கற்றவரை ''நாலு எழுத்துப் படித்தவர் என்று உயர்வாகப் பேசுவதும் கல்லாதவரைச் ''சரியான மடச் சாம்பிராணி'' என்று எள்ளி நகையாடுவதும் இவ்வுலக இயல்பு எனவே கல்வி கற்றால் மேன்மையடையலாம் என்பதைப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வேதநாயகர் பின்வருமாறு பாடுகிறார்.

''கற்றவளே துரைசானி-கல்லா
மற்றவளே சுத்தமடச் சாம்பிராணி!
சதிகாரர் வலையிற் படாதே-கல்வி
மதியில்லாதவனுக்கு வாழ்க்கைப்படாதே''

என்று பெண்ணுக்கு அறிவுறுத்தும் வேத நாயகர் படித்த பெண்ணையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆண்களுக்கு வலியுறுத்துகிறார். தன் பொருட்டுத் தன் தோழனைப் பெண் பார்க்கத் தூது அனுப்பும் மாப்பிள்ளை, பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு கீர்த்தனையில் எடுத்தியம்புகின்றார்.

''எழுத்து வாசகம் அறியாதவள் மட்டி,
ஏதும் அறியாள் அவள் சுரண்டுவாள் சட்டி,
கழுத்திலே அவளுக்குத் தாலியைக் கட்டிக்
காரியமிலை, அது காசுக்கு நட்டி''

என்று அக்கீர்த்தனையில் படிக்காத பெண் வேண்டாம் என மாப்பிள்ளை குறிப்பிடுவதாகப் பாடியிருக்கிறார் வேதநாயகர்.

குடும்பம் சிறப்புற நடைபெறுவது பெண்கள் கையில்தான் உள்ளது. கணவனையும் குழந்தைகளையும் பேணிப் பாதுகாத்து நாத்தனார், கொழுந்தனாரை அரவணைத்து, மாமனார், மாமியாரைப் போற்றி வாழ்ந்தால்தான் இல்லறம் நல்லறமாக விளங்கும் இதனைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பெண்ணுக்குப் பற்பல அறிவுரைகளை வழங்கியுள்ளார் வேதநாயகர்

நல்லதொரு குடும்பம் அமையப் பெண் என்ன செய்ய வேண்டும்? யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? வேதநாயக பின்வருமாறு பாடுகிறார்

தலைவன் நெஞ்சைக் கரைக்காதே. மாமி
தலைமேல் நீ மிளகாய் அரைக்காதே!
நாத்திமேற் கச்சை கட்டாதே. வெகு
ராத்திரமாயவள் தலையை வெட்டாதே!
தலையணை மந்திரம் தீது-கெட்ட
கலகக்காரிகளுக்குக் கசுட்டம் போகாது!.

நல்ல மனைவியின் இலக்கணம் என்ன? அவள் ஆபத்து வேளையில் அறிவுட்டும் மந்திரியாகவும், அரும்பிணி வரும் போது அதைத் தீர்க்கும் சஞ்சீவியாகவும், துன்பம் அணுகும்போது ஆறுதல் சொல்பவளாகவும், வறுமைக் காலத்தில் திருமகள் போலக் கை கொடுப்பவளாகவும், கணவன் பாவ காரியங்கள் செய்யாமல் தடுக்கும் சற்குருவாகவும் விளங்கவேண்டும்.

'சுஆபத்து வேளையில் அறிவுசொல் மந்திரி.
அரும்பிணிக்கு அவள் ஒரு சஞ்சீவி-துன்பம்
அணுகும் போது ஆறுதல், தரித்ர காலத்தில்
பாபத்தில் வீழாமற் போதிக்குஞ் சற்குருசுசு
நல்ல மனைவி என்கிறார் வேதநாயகர்.

பெண்ணின் அடிப்படையான பலவீனம், நகைகள் மீதும் அவள் கொண்டிருக்கும் தனியாத ஆகை தன்னிடம் இல்லாவிட்டாலும், இரவல் வாங்கியாவது அவற்றை அணிந்து கொள்ளத் துடிக்கும் அவள் மனம், இது இந்தியப் பெண்ணிடம் மட்டும் அல்ல உலகத்தில் உள்ள அனைத்துப் பெண்களிடத்தும் காணக்கூடிய ஒரு பண்பே ஆகும். எழுத்தாளர் மாப்பசான் எழுதிய ''நெக்லஸ்'' என்னும் உலகப் புகழ்பெற்ற சிறுகதையும் அதற்குச் சான்று பகரும் வேண்டாத இவ் ஆசையை விட்டு விலகுவது தான் பெண்ணுக்கு நல்லது என்பதை தேவநாயகர் குறிப்பிடத் தவறவில்லை.

''நகைதுணி இரவல் வாங்காதே-வாங்கில்
சகலரும் ஏசுவர் தாழ்வு நீங்காதே
என்றும் ''கையிலாக் காது கேளாதோ-பல
வகை பட்டில்லா உடல் வளர்ந்து நில்லாதே''

என்றும் அறம் வலியுறுத்தும் வேதநாயகர் பெண்கள் இத்தகைய ஆசைகளை வளர்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவர்களுக்குக் கல்வியறிவு இன்மைதான் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார் பெண்கள் அணிகள்

எனக் கருதும் நகைகளைக் ''கால்'' விலங்குகள்'' ''கை விலங்குகள்'', கழுத்து விலங்குகள்'', இடுப்பு விலங்குகள்'', ''தலை விலங்குகள்'', ''விரல் விலங்குகள்'', என்றும் கல்வியை ஞானாபரணம் என்றும் வேதநாயகர் குறிப்பிடுகின்றார்.

''பெண் மானம்'' பேசும் பெண்ணியம்

ஆண்கள் பெண்களைப் கொடுமைப்படுத்தும், கேவலப்படுத்தும், அடிமைகளைப் போல நடத்தும் நிலை மாற வேண்டும் என்றும், பெண்களுக்கும் சம உரிமை நல்கப்படல் வேண்டும் என்றும் பெண்மானம் என்னும் நூலில் வேதநாயகர் எடுத்துக்காட்டுகின்றார்.

பெண்ணுக்குக் கணவன் செய்யும் கொடுமை போதாதென்று, மாமியார், நாத்தனார் கொடுமை மற்றொரு புறம் நாய், பசு, மாடு முதலிய விலங்குகளின் மீது காட்டும் அன்பைக் கூட மாமியார் தன் மருமகளிடம் காட்டுவதில்லை. மருமகளுக்கு எவ்வளவு தான் வயிறு பசித்தாலும், புருசன், மாமன், மாமி முதலானவர்கள் எல்லாரும் சாப்பிட்டு எல்லா வேலைகளும் முடிந்த பிறகுதான் ச ாப்பிட வேண்டுமேன்றிப் பசித்த போது சாப்பிட முடியாத நிலை பெண்களுக்கு உண்டு. இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பெண்கள் வாழ்வில் சுட்டிக் காட்டலாம். இவற்றையெல்லாம் கண்டு வருந்தும் வேதநாயகர், ''இது எவ்வளவு பெரிய அநீதி? ''தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்பது போல, ஸ்திரீக்குப் பசித்தபோது அவள் முந்திப் புசித்தால் குற்றமென்ன?'' என்று பெண்ணின் உரிமைக்காக நியாயமான குரல் கொடுக்கின்றார்.

''பிரதாப முதலியார் சரித்திரம்'' பேசும் பெண்ணியம்

தமிழின் முதல் புதினமான 'சுபிரதான முதலியார் சரித்திரம்சு (1879) நூலில், அதன் கதாநாயகி ஞானாம்பாள் ஒரு சாதாரணப் பெண்ணாகச் சித்தரிக்கப்படவில்லை அவள் ஆண்களுக்கு நிகரான அறிவுக்கூர்மை, தைரியம் மற்றும் தர்க்க ரீதியாகப் பேசும் திறன் கொண்டவள்

கதையின் நாயகன் பிரதாப முதலியாரை விடவும் ஞானம்பாள் அதிக புத்தி சாலியாகவும், ஒரு நாட்டை ஆளும் திறமை கொண்டவளாகவும் காட்டப்படுகிறாள் இது அந்தக்கால சமூகச் சூழலில் ஒரு புரட்சி கரமான சித்தரிப்பாகும்

''பெண் கல்வி'' பேசும் பெண்ணியம்

பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தி இவர் எழுதிய இந்த நூல் மிகவும் முக்கியமானது.

''கண்கள் இருந்தும் ஒளியில்லாவிட்டால் பார்க்க முடியாது, அதுபோல மனிதர்களுக்குக் கல்வி இல்லாவிட்டால் பகுத்தறிவு வேலை செய்யாது'' என்று பெண் கல்வியின் அவசியத்தை விளக்கினார்.

''சுகுண சுந்தரி சரித்திரம்'' பேசும் பெண்ணியம்

பிரதாப முதலியார் சரித்திரம் நாவலின் வெற்றியைத் தொடர்ந்து அவர் எழுதிய இரண்டாவது நாவல் இதுவாகும். இப்பதிப்பிலும் பெண்களின் ஆளுமை மற்றும் சமூக் நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பெண்கள் எதிரான குழந்தைத் திருமணம் போன்ற சமூகத் தீமைகளை இப்புத்தகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பெண் மதிமாலை பேசும் பெண்ணியம்

பிறந்த மனையிலும், புகுந்த மனையிலும் பெண்கள் சோம்பலின்றி வேலை செய்தல் வேண்டும். வாழ்க்கைப்பட்ட பெண் இல்லாள் என்று சொல்லப்படுவதால் அவளே வீட்டுக்கு அதிபதி: அவள் கணவனுக்கும் மற்ற பெரியோருக்கும் பணிந்து நடக்க வேண்டும்: இல்லறம் நடத்தும் பெண்கள் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டும்: மாதா பிதா குரு

தெய்வம் இவர்களிடம் அன்பும் பணிவும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்'' என்று தொடங்கி பெண்களுக்கான பல்வேறு அறங்கள் பற்றியும் நீதி பற்றியும், பெண் கல்வியின் இன்றியமையாமை பற்றியும் பெண் மதிமாலை கூறுகிறது.

''பெண்கள் குழந்தைகளைப் பொறுப்புடன் வளர்த்தல் வேண்டும். கணவன் நல் வார்த்தையைத் தட்டக் கூடாது: மாமிமேல் வன்மம் காட்டக் கூடாது. தலையணை மந்திரம் தீது'' எனப் பெண்களுக்கான பல்வேறு அறிவுரைகளைப் பெண்மதிமாலை குறிப்பிடுகிறது.

முடிவுரை

பெண்ணியம், பெண்கல்வி, பெண் உரிமை என்று பல்வேறு வகையில் பெண்களுக்கான போராட்டத்தில் முன் நின்ற தமிழ் தென்றல் திரு.வி.க, தேசிய கவிஞர் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், தந்தை பெரியார் என அவர்களின் வரிசையில் வேதநாயகம்பிள்ளை நீங்காத முதன்மை இடத்தை பிடித்துள்ளார். ஆண்களின் வாழ்வில் சரி பங்கு வகிக்கும் பெண்கள் முன்னேற வேண்டும். அவர்கள் கல்வியறிவு பெற வேண்டும் என்பதில் மிகுந்த விருப்பம் உடையவராக விளங்கினார். வேதநாயகர் பெண்கள் முன்னேற வேண்டும் என்று பேசுவதுடன் எழுதியதுடன் நின்றுவிடாமல் அதனை செயல்படுத்தும் விதமாக 1869ல் மாயுரத்தில் தனது சொந்த செலவில் பெண்களுக்கென தனிப்பள்ளியை துவக்கினார்.

அதுமட்டுமில்லாதுகுழந்தைதிருமணத்தை கண்டித்தார் விதவை மறுமணத்தை ஆதரித்தார், வரதட்சணை வாங்குவதை சாடினார். பெண்களை ''அடுப்புதும் பெண்கள்'' என்ற நிலையிலிருந்து மாற்றி சமுகத்தின் அங்கமாக மாற்றினார்.

துணை நூல் பட்டியல்

1. நீதிநூல் சரவணபவ அச்சுக்கூடம், சென்னை பதிப்பு ஆண்டு 1927.
2. பெண்மதி மாலை ஆனந்தா பிரிண்டிங் ஒர்க்ஸ் அச்சுயந்திரசாலை, திருவள்ர், பதிப்பு ஆண்டு 1926
3. பெண்மானம சென்னை, ஏசுயாடிக் பிரஸ் முதல் பதிப்பு 1869
4. சர்வ சமய கீர்த்தனைகள் 1939, 1940 ஆண்டுகளில் தமிழ் டிஜிட்டல் லைப்ரரி மூலமாகவும் சமீபத்தில் கௌரா மற்றும் சாரதா பதிப்பகங்கள்
5. சுகுண சுந்தரி சரித்திரம் ஆம்ருதா பதிப்பகம் தமிழ் டிஜிட்டல் லைப்ரரி ப்ராஜெக்ட் மதுரை இணையதளம். பிரதாப முதலியார் சரித்திரம் பிளவர் பப்ளிகேசுன்ஸ், நியு செஞ்சரி புக் ஹவுஸ் இணையதளம்: தமிழ் இணையக் கலிவி கழகம்.